**தலைப்பு 184 - தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 769,275,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 504,925,676 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய ஏற்பாட்டில் ரூபா 264,349,324 அதாவது 34 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 562,475,000 | 431,562,823 | 130,912,177 | 23.27 |
| மூலதனம் | 206,800,000 | 73,362,853 | 133,437,147 | 64.52 |
| கூட்டுத்தொகை | **769,275,000** | **504,925,676** | **264,349,324** | **34.36** |

**(ii) பாதீட்டு முரண்கள்**

04 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பை மிகைத்து ரூபா 2,917,444 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தன.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சிற்கு உரித்தான 18401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18401 | 2,000,000 | 650,250 | 600,000 | 855,546 | 5,500,000 | (205,296) |

**(இ) கட்டு நிதிக் கணக்குகள்**

வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த ஓர் உத்தியோகத்தர் தொடர்பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்று முடிவடையாதிருந்தமையால் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,520 தொகையான முற்பணத் தொகை அறவிடப்படுவதற்கோ அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பதிவழிப்பதற்கோ அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்றே வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நுவரெலியா மாவட்ட அலுவலகத்தை தாபிப்பதற்காக ஆணைக்குழுவால் ரூபா 2,977,179 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம், அமைச்சரின் மாவட்ட அலுவலகமாகவும் சுற்றுலா விடுதியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. ஆகையான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு தமது மாவட்ட அலுவலகத்தை தாபிப்பதற்கு முடியாதிருந்தது. இக் கட்டிடத்திற்காக அமைச்சினால் 2013 ஆம் ஆண்டின் போது நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் பத்திரிகைக்காக ரூபா 476,603 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், இம் மாவட்ட அலுவலகம் ஒரு மாத காலத்திற்குள் தாபிக்கப்படுவதாக 2014 மார்ச் 06 ஆம் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தொடர்பாக நடாத்தப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் ஆணைக்குழுவின் தலைவரால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரையிலும் அவ் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பதவியணியினர் போதாமையால் மாவட்ட அலுவலகம் திறக்கப்படுவது தாமதிக்கப்பட்டதாகவும் இது வரையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் பதவியணியினர் சேர்க்கப்பட்டதை அடுத்து

இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படும் எனவும் செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

கால்நடை வளங்கள் அமைச்சிற்கு உரித்தான ஓர் வாகனம் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 15 ஆம் திகதி வரையிலும் அவ் வாகனத்தின் உரித்தைப் பொறுப்பேற்பதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ் வாகனத்தின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 234,944 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,917,444 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி அம் மீதி ஒரு வருடத்திலும் பார்க்கக் குறைவான காலப்பகுதிக்குரித்தானதாகக் காணப்பட்டது.

## 1.6 செயலாற்றல்

அமைச்சின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைவாக செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(i) 2013 ஆம் ஆண்டின் போது தேசிய போக்குவரத்துக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 2014 மே மாத இறுதி வரையிலும் அது அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட

வரைவின் திருத்தத்திற்காக அமைச்சினால் கருத்துக்களும் தீர்மானங்களும் 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் உடன்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஒருங்கிணைந்த அமைச்சரவைத் திருத்தம் ஒன்று சமர்ப்பிக்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

(ii) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்திற்கு சிறு சிறு திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் மாத இறுதி வரையிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. சுட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றதை உடனடுத்து எண்ணக்கருப் பத்திரம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதாக செயலாளர் அறிவித்திருந்தார்.

(iii) தீர்மானிக்கப்பட்ட பக்கமூன பேரூந்து தரிப்பிடம் 2012 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்ட ஓர் செயற்திட்டமானதுடன் அது செயற்படுத்தப்பட்டிராமையால் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இது அவ்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்து இது அகற்றப்பட்டிருந்தது.

(iv) கலேவெல பூண்டுலொயா பேரூந்து தரிப்பிடம் 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான காணி தொடர்பாக நிலவும் சிக்கல் தீர்க்கப்படாமையால் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 8 பயணிகள் தரிப்பிடங்கள் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டு இதற்காக ரூபா 2 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு பயணிகள் தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத்திட்டத்தின் படி, ஆண்டின் போது 15 பட்டதாரிகளும் 15 முகாமைத்துவ உதவியாளர்களும் பயிற்றப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்த ஒரு நபரும் பயிற்சிக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.7 நட்டங்களும் இழப்புகளும்**

---------------------------------------

அமைச்சிற்கு உரித்தான ஓர் வாகனம் 2013 ஆகஸ்ட் 13 ஆம் திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1)(3) இன் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நேர்ந்திருந்த ரூபா 4,704 தொகையான நட்டங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் இழப்புப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.8 மனிதவள முகாமைத்துவம்**

-------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 05 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 34 | 19 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 15 | - |
| | மொத்தம் | 59 | 39 | 20 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.